பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை 24.09.2023 கதிர் 317

## திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு உடனடியாக விலக்கப்படவேண்டும்

### சட்டத்தரணிகள் கூட்டமைப்பு பகிரங்க வலியுறுத்து

இலங்கை ஆட்சியாளர்கள் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும் நிகழ்நிலை காப்புச் சட்டத்தையும்; விலக்கிக்கொள்ள வேண்டுமென சட்டத்தரணிகளின் கூட்டமைப்பு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் ஆகியவற்றைச் சட்டத்தரணிகள் கூட்டமைப்பியராகிய நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்து வெளியிடப்பட்ட பாரதூரமான அடிப்படை கரிசனைகள் குறித்து ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஐக்கியநாடுகள் பொதுச்சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கூட்டத்தொடருக்கு இணையாகவும் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அவற்றில் ஜனாதிபதி மட்டுமன்றி அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும்கூட பங்கேற்றார்.

பக்க நிகழ்வுகளாக இடம்பெறும் பல்வேறு சந்திப்புக்கள் குறித்தும் ஒளிப்படங்களும் செய்திக் குறிப்புக்களுமாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணம் என்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்கிடையில் ஐ.நா. கூட்டத் தொடரை ஒட்டி வெளியான படங்களில் ஒன்று சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது.

அந்தப் படம் அயலுறவுத் ☞ 2

## ஓ.எல். பரீட்சை பிற்போடப்படும்

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையை பிற்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் 2024ஆம் ஆண்டுக்கான பாடநூல் விநியோகத்தை தொடக்கி வைத்த நிகழ்வில் நேற்று தலைமை அதிதியாக கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாற தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு மாதம் அல்லது ☞ 2

## சமூக ஊடகங்களில் பொய் பரப்பி தனிநபரின் கௌரவத்தைச் சிதைப்பதை ஏற்க முடியாது

### ஜோன்ஸ்டன் பெர்னான்டோ எம்.பி. கருத்து

சமூக ஊடகங்கள் மூலம் இப்போது இலகுவாகப் பொய்களைப் பரப்பி ஒருவரது தனிப்பட்ட கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் சேற்றை வாரி இறைக்கிறார்கள். அது தொடர அனுமதிக்க முடியாது என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பில் கருத்துகளை வெளியிடுகின்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழலில் யாரும் யாரையும் பொய்யான கருத்துக்களையும் விடயங்களையும் முன்வைத்து ☞ 2

## தற்போதைய அரசியல்வாதிகளுக்கு மீண்டும் இடமளித்தால் எரிந்து சாம்பராகி விடுவீர்கள்

### தம்மரத்ன தேரர் பொது மக்களுக்கு எச்சரிக்கை

இனம், மதம் என்ற போர்வையில் பொதுக்களை மக்களைக் குருதி சிந்தவைக்கவே முனைகின்றார்கள். இந்தப் பயங்கரமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பயங்கரவாதிகளுடன் பொதுமக்கள் தொடர்புகொள்ளாதீர்கள். தற்போதைய ஆட்சியாளர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும், அதிகாரத்தில் அமருவதற்ககும் இடமளித்தால் பொது மக்களாகிய நீங்கள் எரிந்துசாம்பலாகிகாற்றில் கரைந்துவிடுவீர்கள். நாடும் இருப்பிடம் தெரியாது காணமலாகிவிடும்.

மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாரதிபதி கலாநிதி வலவாஹங்குனவெவே தம்மரத்ன தேரர் தெரிவித்தார்.

மிஹிந்தலையில் செய்தியா ☞ 8

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் ரத்தால் ரூ. 1 பில்லியன் இழப்பு

### சுட்டிக்காட்டுகிறது பவ்ரல் அமைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான அண்மைய தீர்மானமானது ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி இழப்புக்கு வழிவகுக்கும் என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள்நடவடிக்கை (பவ்ரல்) அமைப்புத் தெரிவித்துள்ளது.

நாட்டில்பொருளாதார நெருக்கடி நிலவும் பின்னணியில் ஆட்சியாளர்களின் இந்த முடிவு குறித்து பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான முடிவினால் ஏற்பட்ட நிதி இழப்புக்கு யார் பொறுப்புக் கூறுவது எனவும் ஹெட்டியாராச்சி கேள்வி எழுப்பினார். தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தயாரிப்பில் ☞ 8

## வாகனம் தவிர்ந்த இறக்குமதிகள் ஒக்டோபர் மாதம் முதல் அனுமதி

வாகன இறக்குமதி கட்டுப்பாடு தவிர்ந்த ஏனைய இறக்குமதி கட்டுப்பாடுகள் எதிர்வரும் மாதத்தில் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் தொடர்பான மாநாடொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் ☞ 2

## பங்களாதேஷின் கடன் முழுமையாக அடைப்பு

பங்களாதேஷிடமிருந்துபெற்றுக்கொண்ட கடனுக்கான இறுதித் தொகையை வட்டியுடன் இலங்கை மீளச் செலுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்குமுன்னர் நாணய மாற்று ஒப்பந்தத்தின் கீழ் பங்களாதேஷிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனை இலங்கை பெற்றுக் கொண்டது. ☞ 8

## பச்சிளம் குழந்தைகளை விற்கும் மோசடி கண்டியில் முறியடிப்பு

### வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் கைது

பச்சிளம் குழந்தைகளைவிற்பனைசெய்யும் மோசடிஒன்றைக்கண்டி அதிகாரிகள் கண்டறிந்து முறியடித்துள்ளனர். கண்டி தேசிய வைத்தியசாலையைச்சேர்ந்த சிற்றூழியர் ஒருவரையும் இது தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். அவரது வீட்டிலிருந்து இரு குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் விற்பதற்குத் தயாராக இருந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ☞ 8

## இலங்கையர் மூவரைக் கொன்ற 2 இலங்கையரை தேடி வேட்டை

### மலேசிய தலைநகர் கோலாம்பூரில் சம்பவம்

மலேசியத்தலைநகர் கோலாலம்பூரில் மூன்று இலங்கையர்களைக் கொலை செய்தார்கள் என்று சந்தேகிக்கப்படும் இரு இலங்கையர்களை அந்தநாட்டுப்பொலிஸார் தேடி வருகின்றனர்.

வெள்ளிக்கிழமை இரவு இந்தக் கொலைகள் நிகழ்ந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். செந்தூல், மாவட்டம் கீழ்கோவில் கிராமத்தில் பெர் ஹென்டியன் தெருவில் உள்ள கடைவீதியில் உள்ள மேல் மாடியில் கொலைகள் நிகழ்ந்துள்ளன. கொலையாளிகள் என்று சந்தேகிக்கப்படும் இருவரும் ஆண்கள்.

கொலை ☞ 8

## உள்ளூராட்சித் தேர்தலை இரத்துச் செய்யும் யோசனை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பு

உள்ளூராட்சிமன்றங்களுக்கான வேட்புமனுக்களைஇரத்துச்செய்ய அமைச்சு மட்டத்திலான ஆலோசனைக் குழு மேற்கொண்ட தீர்மானத்தைச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ள நிலையில் வேட்புமனுக்கள் தொடர்பில் அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டுச் சட்டங்களுக்கு அமைவாக சமாப்பிக்கப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பில் அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த தீர்மானம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டப்பிரிவின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் திருத்தங்கள் காணப்படுமிடத்தில் அவற்றை மேற்கொண்டு அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதி பெறப்படவுள்ளது. இவ்வாறான குறித்த சட்டமூலம் ☞ 8

## ஊடகங்களை முடக்கவே நிகழ்நிலை காப்புச் சட்டம்

### ஜேவிபி குற்றச்சாட்டு

ஊடகங்களை முடக்கவே நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் என்ற பெயரில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்கவை மக்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கவில்லை. அவர் நாடாளுமன்றத்தின் ஊடாக சூழ்ச்சிகள் மூலம் ஜனாதிபதியாகிவிட்டார்.

அவ்வாறான ☞ 8

## இனி இது .....

துறை அமைச்சர் அலி சப்ரி கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில்எடுக்கப்பட்டது.ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத்தொடருடன் இணைந்து இடம்பெற்ற நிகழ்வொன்றில்எடுக்கப்பட்ட அந்தப் படத்தில் அமைச்சர் அலிசப்ரிமட்டுமன்றி அவரது மகனும்இருப்பதேகடும்விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியும்அவரதுமகனும் இருக்கும் அந்தப் படம் சமூக வலைத்தளங்களில் சக்கை போடுபோடுகின்றது. கருத்துக்கள், விமர்சனங்கள் அள்ளிக் குவிகின்றன. எல்லாமே அமைச்சரை விமர்சித்தே வருகின்றன.

அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கு ஏன் இவ்வாறானசலுகைகள்வழங்கப்படுகின்றன என்பதே இந்தப் படத்தையொட்டி மக்கள் எழுப்பும் கேள்வி..

ட்விட்டர் தளத்தில் அதிகம் பரவி வரும் இந்தப் புகைப்படத்தை ஹைலைட் செய்து, அமைச்சின்மகன்நியூயார்க்கில்உள்ளஐ.நா.வின்அதிகார பூர்வ குழுவில் எப்படி இருக்கிறார் என்று பலர் கேள்வி எழுப் பியுள்ளனர்.

நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையிலான ஜனாதிபதி குழுவில்ஆளும்கட்சிமற்றும் எதிர்கட்சியைச்சேர்ந்த ஐந்து நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஏன்சேர்க்கப்பட்டனர்என்பது சமூகஊடகங்களில்ஏற்கனவே சர்ச்சையாகி இருந்தது. பின்னர்அதுகுறித்துநாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பப் பட்டது.

அதனைத் தொடர்ந்து அலி சப்ரியின் மகனது விவகாரம் இப்போது பூதமாகக் கிளம்பியுள்ளது. சர்சை தீவிரமாவதைக் கண்ட உடனேயே,அதுபற்றித்தனது தரப்பு விளக்கம் ஒன்றை அமைச்சர் வெளியிட்டுள்ளார். தற்போதைய எக்ஸ் பக்கமான ருவிட்டரில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் அலி சப்ரி தனது மகன் ஐ.நாவிற்கு எப்படி வந்தார் என்பது தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

அதில், தனது அமைச்சு மற்றும் அயலுறவுத்துறை விவகாரங்களில்தனதுமகன் தொண்டு அடிடப்படையில் பல பணிகளையும் உதவிகளையும் செய்து வரும் ஒருவர் என்றும், நீண்ட காலமாகவே தனது அயலுறவுத் துறை அமைச்சின் பணிகளில் அவர் ஆர்வத்துடன் ஈடுபடுபவர் என்றும், தன்னார்வலரான அவர் இந்தச் சந்திப்புக்களில் பங்கேற்றிருந்தார் என்றும் கூறியிருக்கிறார்.

உண்மைஎன்னவென்றால் அலிசப்ரியின்மகன்அமெரிக்காவில்தான் கல்வி கற்கிறார். அதனால் அவருக்கு நியூயோர்க்சென்றுதந்தையுடன் சேர்ந்திருப்பது ஒன்றும் சிரமமானதாக இல்லை, அதனால் அவர் தலைவர்களைச் சந்திப்பதற்கும் படம் எடுப்பதற்கும்தடைகள்இருக்கவில்லை. இதுதான் இப்போது சர்ச்சைக்குரிய பேசு பொருளாகி இருக்கின்றது.

அரசியல்வாதிகளின் பிள்ளைஎன்கிறஒருதகுதியின் காரணமாகவே உலகத் தலைவர்களையும் உலகின் முக்கியமான நபர்களையும் இலகுவில் சந்திப்பதற்கான வாய்ப்பை அவர்கள் பெற்றுக் கொள்ளலாமாஎன்பதேசமூக வலைத்தளப்போராளிகளின் கேள்வியும் கவலையும். இரண்டாவது நாளாக நேற்றும்சமூக ஊடகங்களில் இந்த விவகாரம் பயங்கர வைரலாகப் பரவி வந்தது.

.இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்கள் பதிலளிக்கவில்லை. இந்த சட்ட மூலங்களை தெளிவுபடுத்துவதற்கு நியாயப்படுத்துவதற்கான வெளிப்படையான பொறுப்புக்கூறும் செயற்பாடுகளை ஆட்சியாளர்கள்முன்னெடுக்கவில்லை வலுவான மக்கள் கலந்தாய்வை மேற்கொள்ளவில்லை.

இரண்டுசட்டமூலங்களிலும் பயங்கரவாதம் -குறித்து முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் - குற்றங்களென தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் பரந்துபட்டவையாகவும் தெளிவற்றவையாகவும் காணப்படுகின்றமை முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

கருத்துவேறுபாடுகளை நசுக்குவதற்கும் சிவில் உரிமைகளை கட்டுப்படுத்துவதற்குமான ஆற்றலை கொண்ட இந்த ஆபத்தான சட்டங்களை இயற்றுவதற்கான முயற்சிகள் வரலாற்றில் முன்னொருபோதும்இல்லாதஅளவிற்கு நாட்டின் ஜனநாயகம் குறைந்தமட்டத்தில் உள்ளமையானது அச்சத்தை ஏற்படுத்துகிறது.

ஆழமான பொருளாதார நெருக்கடிஅதன்காரணமாகத் தங்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் காரணமாக இந்த நாட்டின் மக்கள் தங்களது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம், அரச அதிகாரிகளிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

பொதுமக்களின் துயரங்களை செவிமடுப்பதற்கு பொதுமக்கள் அவர்களின் குழுக்கள் நலிந்துபட்டவர்களுடன் ஈடுபாட்டை பேணுவதற்கு பரந்துபட்ட தளமொன்று உருவாக்கப்பட வேண்டுமென ஜனநாயகம் இந்த தருணத்தில் வேண்டுகோள் விடுத்து நிற்கின்றது.

நியாயபூர்வான உடன்பட மறுத்தல்விமர்சனம்-எதிர்ப்பு மற்றும் இலங்கையில் ஆட்சி முறை தொடர்பான பல்வேறு எண்ணங்கள் குறித்து அணிதிரளுதல் ஆகியவற்றிற்கு எதிரான சகிப்புதன்மையை இரு சட்ட மூலங்களும் வெளிப்படுத்தியுள்ளன.

இது ஜனநாயகம் -சிவில் சுதந்திரம் -நிறைவேற்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து பொதுமக்களின் இறைமையைபாதுகாப்பதில் நீதித்துறையின் பங்களிப்பு ஆகியவற்றிற்குவிடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தலாகும்.

உண்மையில்பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலங்கள் இலங்கையின் குடிமக்களின் பரந்த அளவிலான சாதாரண நடவடிக்கைகளின் மீது அதிகப்படியான நிறைவேற்று அதிகாரத்தை நிறுவனமயமாக்கும் முயற்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

ஒன்றுகூடல், பேச்சு, கருத்து மற்றும் சிந்தனை சுதந்திரத்தை பறித்து, நிறைவேற்று அதிகாரத்திற்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கும் இத்தகைய சட்டங்கள், அரசியலமைப்பின் கீழ் மக்களின் இறையாண்மையை ஆக்கிரமிக்கின்றமையால்அவைஉடன் மீளப்பெற வேண்டும் - என்றுள்ளது.

## வாகனங் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

அத்தியாவசியமான இறக்குமதிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில், அந்நியச் செலாவணிக் கையிருப்பு வலுவடைந்து வருகின்றது.

தொடர்ந்து பேணப்படும் 600 வகையான பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளில், வாகனங்களுக்கான 270 வகையான பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகள் தவிர்ந்த ஏனைய கட்டுப்பாடுகளை நீக்க எதிர்பார்த்துள்ளோம்.

அடுத்த மாதம் குறித்த இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் விலை ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கானவாய்ப்பு சந்தைக்குக்கிடைக்கும்என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அரசாங்கம்எதிர்காலத்தில் திறந்த சந்தைப் பொருளாதாரத்திற்கு உரிய வகையில் செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளதோடு அதற்குரியநடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது என்றார்.

## சமூக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் தனிப்பட்ட கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் சேற்றை வாரி இறைக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

இதற்கு சமூக ஊடகங்கள் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிலைமையைத் தொடர்வதற்கு இடமளிக்க முடியாது. குறிப்பாக சமூக ஊடகங்கள் வாயிலாக சில நபர்களிடத்தில்பணத்தினைப் பெற்றுக்கொண்டவர்கள் அந்த நபர்களின் நிகழ்ச் சிநிரலுக்கு அமைவாகச் செயற்படுகின்றார்கள்.

இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. ஒரு தனி மனிதனை கடுமையாக விமர்சித்து மோசமான கருத்துக்களை வெளியிட்ட பின்னர் அவர் இழந்த அந்த கௌரவத்தை, மதிப்பினை மீண்டும் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் கடினமான விடயமாகும்.

இதற்குப் பல பொய்யான விடயங்கள் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே பொய்கள் தொடர்வதற்கு இடமளிக்கமுடியாது. அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியமாகும் - என்றார்.

# காலியில் வர்த்தகர் சுட்டுக்கொலை

காலியில் துணிக்கடை வர்த்தகர் ஒருவர் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

டிக்ஸன் வீதியில் காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவர் மீது அடையாளம் தெரியாதவர்கள் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

காலி நகரில் துணிக்கடை வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் 50 வயதான ஆடைத் தொழில்முயற்சியாளரே கொல்லப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தைச் செலுத்தியபடி சாரதி இருக்கையில் அமர்ந்திருந்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஓ.எல். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை மாதம் சாதாரண தர பரீட்சையை பிற்போட வேண்டிய நிலைமை ஏற்படும். அதனை உத்தியோகபூர்வமாக ஆணையாளர் அறிவிக்கவுள்ளார்.

கொரோனா, பெருந் தொற்றுக்கு பின்னர் உருவான நெருக்கடியினால் இரண்டுவருடத்திற்கு அதிகக் காலம் கல்வி செயற்பாடுகள் இடம்பெறவில்லை அந்த விடயம்;, அது பரீட்சையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

இதே நேரம், 2024ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் அடுத்த வருடத்திற்கான பாடப்புத்தகங்களை

தொடர்ச்சி 8 ம் பக்கம்...




# பிள்ளையானின் சொத்துக்கள் சகலதையும் பறிமுதல் செய்க

## முன்னணியின் அமைப்பாளர் சுரேஸ் வலியுறுத்து

'கடத்தல் மற்றும் கொலைகள் மூலம் இராஜாங்க அமைச்சர் சி. சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) பெற்ற சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும்' என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சனல் 4 ஆவண படம் ஈஸ்ரர் குண்டு வெடிப்பு சூத்திரதாரிகளை மிகத் தெளிவாக வெளியிட்டுள்ளதுடன் இந்தத்தாக்குதலுக்குப் பின்னால் இருந்த சூத்திரதாரிகள் இந்த மண்ணிலே செய்த அட்டூழியங்கள் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி எனக் கூறி மக்கள் மத்தியில் தன்னை அடையாளப்படுத்தி, தமிழ் மக் கள் விடுதலைப்புலிகள் கட்சி என்ற பெயரில் புலிகள் என்ற நாமத்தை வைத்து



மக்களை ஏமாற்றி அரசியல் செய்து-வந்த ஒரு சூத்திரதாரியே பிள்ளையான். அவருடன் நெருக்கமாக இருந்த ஆசாத் மௌலான மூலம் அந்த உண்மைகளை வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளதையடுத்து மக்கள் விழிப்படைந்துள்ளனர் எனவே இனியும் மக்கள் ஏமாறக்கூடாது.

தமிழ் மக்கள் போராடிவந்த ஆயுத போராட்த்தை கடந்த 13 வருடங்களாக இப்படிப்பட்டவர்கள் சிங்கள தேசத்துடன் இணைந்து காட்டிகொடுத்து அடித்து நெருக்கி தமிழ் மக்கள் இன்று நடக்க முடியாத நிலையில் தாய் தந்தை அற்ற அநாதைகளாகக் காணப்படுவதற்குக் காரணமான பிள்ளையான் போன்ற நபர்கள் இன்று கையும் மெய்யமாகப் பிடிபட்டுள்ளனர். பிள்ளையான்விடுதலைப்புலிகளில் இருந்து பிரிவதற்கு முன்னர் அவரின் குடும்ப பின்னனி அந்த பகுதி மக்களுக்குத் தெரியும். அவருக்கு எந்த விதமான சொத்துக்களும் இல்லை. ஆனால் அண்மையிலே வீடியோ மூலம் வாழைச்சேனையில் பரம்பரைக் காணி இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனைப் பார்க்கும்போது இவர் ஊழல், இலஞ்சம், கொலைகள், கொள் ளைகள், கடத்தல், காணாமல் போகச் செய்ததன் மூலம் கோடிக்கணக்கான சொத்துக்களை வைத்திருக்கின்றார் என அறிய முடிகின்றது. எனவே இவ்வாறாகச் சேகரித்த அத்தனை சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு இந்த மாவட்டத்திலே இவரால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கும்கொடுக்கப்படவேண்டும். நீதி பிறக்கவேண்டும். - இவ்வாறு தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார். (05)

# பால்மாவுக்கான வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான துறைமுக மற்றும் விமான நிலைய வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான துறைமுக மற்றும் விமான நிலைய வரி 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வரி உயர்வு வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் என்றும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

துறைமுக மற்றும் விமான நிலைய வரி அதிகரிக்கப்பட்டாலும் தொடர்ந்து உள்ளூர் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்படாது என நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (05)



# குறிகாட்டுவான் இறங்குதுறையை புனரமைத்து தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற்கு பொருள்களை கொண்டுசெல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதால் மிக விரைவில் குறிகாட்டுவான் இறங்கு-துறையை புனரமைப்பு செய்து தருமாறு தீவக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு செல்வதற்கான இறங்குதுறையாக குறிகாட்டுவான் இறங்கு துறையே உள்ளது. தற்போது குறிகாட்டுவான் இறங்கு துறை சேதமடைந்துள்ளமையால், கனரக வாகனங்கள் இறங்கு-துறைக்கு அண்மித்த பகுதிக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதனால் கனரக வாகனங்களில் நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்கு கொண்டு செல்வதற்காக கொண்டு வரப்படும் , அத்தியாவசிய பொருள்கள் உட்பட கட்டட பொருள்களான மணல் , கம்பி , சீமெந்து ஆகியவை இறங்கு துறைக்கு சற்று தொலைவில் இறங்கி அங்கிருந்து மனித வலுவை பயன்படுத்தி தூக்கிசென்று படகுகளில் ஏற்ற வேண்டிய நிலைமை காணப்படுகிறது. அதனால் பொருள்களைக் கொண்டுசெல்வோர் அதிக சிரமங்களை எதிர்கொள்வதுடன் அதிகளவான கூலியும் வழங்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.

அதேவேளை குறிகாட்டுவான் - நயினாதீவுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த 'கடற்பாதை' மிக மோசமாக பழுதடைந்துள்ளமையால் அதன் சேவையும் கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளமையால் , நயினாதீ-வுக்கு பொருளடகளை எடுத்து செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நயினாதீவு நாக பூசணி அம்மன் மற்றும் நாக விகாரை ஆகியவற்றுக்கு அதிகளவான யாத்திரியர்கள் தினமும் செல்வதால்,பயணிகள் படகு சேவையில் பொருள்களை அதிகளவில் ஏற்ற முடியாத நிலைமை காணப்படுவதால் , நயினாதீவுக்கு பொருள்களைக் கொண்டு செல்வோர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அதனால் மிக விரைவில் குறிகாட்டுவான் பாலத்தையும் , கடற்பாதையை புனரமைப்பு செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (05)

# உள்நாட்டு விசாரணையில் உண்மைகள் வெளிவராது

## ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக உள்நாட்டில் விசாரணைகள் நடைபெற்றால் ஒருபோதும் உண்மைகள் வெளிவராது என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அஸாத் மௌலானா என்பவர் யார்? பிள்ளையானின் செயலாளர். அவர் நாட்டை விட்டு செல்லும்வரை பிள்ளையானுடன்தான் இருந்துள்ளார். இவர் மொட்டுக் கட்சியுடன் நெருக்கமாக இருந்தவர். அப்போது நல்லவராகத் தென்பட்டவர். இன்று இவ்வாறான கருத்துக்களைக் கூறியவுடன் மோசமானவராகப் பார்க்கப்படுகிறார்.

ஈஸ்டர் தாக்குதலானது வவுனதீவு சம்பவத்துடன் ஆரம்பமாகவில்லை. 2015 ஜனவரி, 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுடன் தான் ஆரம்பமானது.

ஜனவரி 6 ஆம் திகதியன்று, புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சாலே, மக்கள் எதிர்பார்க்கும் முடிவு வாராவிட்டால் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள், எனவே, அவசர காலச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்தார். ஆனால், அன்று அப்படி எந்தவொரு அசம்பாவிதமும் நடக்கவில்லை. இங்கிருந்துதான் ஈஸ்டர் தாக்குதலுக்கான சூழ்ச்சி ஆரம்பமானது.

லசந்த விக்ரமதுங்க, தாஜுடீன், பிரகீத் எக்னெலிகொட கொலை வழக்குகளை நாம் விசாரணை செய்தோம்.

புலனாய்வுப் பிரிவின் சில ரைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தினோம். சுரேஷ் சாலேவையும் நீதிமன்றில் நிறுத்தினோம். கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இவர்களுக்கு சிக்கல் வந்தது. எனவே, சர்வதேச புலனாய்வுப் பிரிவி னரின் உதவியுடன் இந்த விசா ரணைகளைச்செய்யவேண்டும்.

உள்நாட்டில் விசாரணை நடைபெற்றால் ஒருபோதும் உண்மை வெளிவராது. - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# இலங்கை தொடருந்து சேவைக்கான ஒரேயொரு ஆதரவாளர் இந்தியாவே

இலங்கை ரயில் சேவையின் மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான (66 கி.மீ.) ரயில் பாதையின் சமிக்கை தொகுதியை வடிவமைத்தல், பொருத்துதல், பரிசோதித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தம் ஒன்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைசர் பந்துல குணவர்த்தன மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் முன்னிலையில் இலங்கை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் ஐ.ஆர்.சி.ஓ.என். நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத், இலங்கை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலங்கை ரயில் சேவைகள் திணைக்களம், ஐ.ஆர்.சி.ஓ.என். நிறுவனம் ஆகிய-வற் றின் சிரேஸ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

318 மில்லியன் அமெரிக்க டொலர் இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 14.90 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுவாக்குதல், நாட்டின் பொருளாதர மீட்சியைத் துரிதப்படுத்துதல், இலங்கை மக்களின் போக்குவரத்தை இலகுவாக்குதல் ஆகியவற்றில் இந்த சமிக்கைத் தொகுதியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

மேலும், தற்போதைய சூழலில் இந்தத் திட்டத்துக்கான கடனுதவி, இலங்கை மக்களுடன் இந்திய அரசாங்கமும் மக்களும் துணை நிற்பதற்கான தொடர்ச்சியான விருப்பத்தை அடையாளப்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன உரை நிகழ்த்தும்போது, கடந்த ஆண்டு பொரு ளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு பல வழிகளில் ஆதரவளித்த பிரதமர் ஸ்ரீநரேந்திர மோடிக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் ரயில் சேவை மேம் பாட்டுத் திட்டங்களுக்கு அண்மைக் காலமாக இந்தியாவில் இருந்து மட் டுமே கடனுதவி அடிப்படையில் ஆதரவு கிடைத்துள்ளது என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதுவரை வழங்கப்பட்ட 5 கடனுதவி திட்டங்களில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டங்கள் ரயில்வேத் துறையில் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்துடன், 2009 மார்ச்சில் தனது செயற்பாடுகளை இலங்கையில் ஆரம்பித்திருந்த ஐ.ஆர்.சி.ஓ.என். நிறுவனம் இந்திய உதவியின் கீழ் இலங்கையில் பல்வேறு வகையான திட்டங்களைநிறைவேற்றியுள்ளதுடன், இலங்கையின் ரயில் சேவைகள் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல், திறன்விருத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது, ஐ.ஆர்.சி.ஓ.என். நிறுவனம், மாஹோவிலிருந்து ஓமந்தை வரையிலான (128 கிமீ) ரயில்பாதையின் புனரமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தி பணிகள் உட்பட ரயில்பாதையைமேம்படுத்துவதற்கான திட்டத்தை 91.27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்கின்றது.

இத்தத் திட்டத்தின் கீழ், அனுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான ரயில்பாதை புனரமைப்பு பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்-யப்பட்டுள்ள நிலையில், அனுராதபுரத்திலிருந்து மாஹோ வரையிலான புனரமைப்பு பணிகள் 2024 ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. (05)

# அனைத்துச் சமூகங்களையும் நாம் ஒன்றிணைத்துள்ளோம்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பெருமிதம்




'சமாதானமின்மையால்ஏற்பட்ட வடுக்களை நிவர்த்தி செய்-யவே அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்துள்ளோம்' என கிராமியபொருளாதார இராஜாங்க அமைச்சர்காதர்மஸ்தான் தெரிவித்தார்.

உலக சமாதான நாளான வெள்ளிக்கிழமை, முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - கடந்த காலங்களில் சமாதானமின்மையால் ஏற்பட்ட வடுக்களை நிவர்த்தி செய்யும் விதமான அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து இந்நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

எமது நாட்டில் சமாதானமின்மையால் ஏற்பட்ட பிரச்சினைகள், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள், பொருளாதார தாக்கம் என்பவற்றை நாம் அறிவோம்.

இனிமேல் எந்தவகையிலேயும் சமாதானம் இல்லாமல் போகக்கூடாது என்ற அடிப்படையில் உலக சமாதான தினத்தன்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இதனை முன்னெடுத்துள்ளோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்ப்புக் குரல்களுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும்

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலமும் மீண்டும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளனை. இலங்கை ஆட்சியாளர்கள் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும் நிகழ்நிலை காப்புச் சட்டத்தையும்; விலக்கிக்கொள்ளவேண்டுமெனசட்டத்தரணிகளின் கூட்டமைப்பு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**ஏற்கனவே முன்வைக்கப்பட்ட இந்தச் சட்டங்களுக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அதன் திருத்தப்பட்ட வரைவு அண்மையில் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது. இப்போது அந்த திருத்திய வரைபுக்கும் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.**

**ஏற்கனவே வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து வெளியிடப்பட்ட பாரதூரமான அடிப்படை கரிசனைகள் குறித்து ஆட்சியாளர்கள் பதிலளிக்கவில்லை. இந்த சட்டமூலங்களை தெளிவுபடுத்துவதற்கு நியாயப்படுத்துவதற்கான வெளிப்படையான பொறுப்புக்கூறும் செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவில்லை வலுவான மக்கள் கலந்தாய்வை மேற்கொள்ளவில்லை.**

**இரண்டுசட்டமூலங்களிலும்பயங்கரவாதம்–குறித்து முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் – குற்றங்களென தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் மிகவும்பரந்துபட்டவையாகவும்தெளிவற்றவையாகவும் காணப்படுகின்றமை முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.**

**கருத்துவேறுபாடுகளை நசுக்குவதற்கும் சிவில் உரிமைகளை கட்டுப்படுத்துவதற்குமான ஆற்றலை கொண்ட இந்த ஆபத்தான சட்டங்களை இயற்றுவதற்கான முயற்சிகள் வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு நாட்டின் ஜனநாயகம் குறைந்தமட்டத்தில் உள்ளமையானது அச்சத்தை ஏற்படுத்துகிறது.**

**நியாயபூர்வான உடன்பட மறுத்தல் விமர்சனம் –எதிர்ப்பு மற்றும் இலங்கையில் ஆட்சி முறை தொடர்பான பல்வேறு எண்ணங்கள் குறித்து அணிதிரளுதல் ஆகியவற்றிற்கு எதிரான சகிப்புதன்மையின்மையைஇந்தஇருசட்டமூலங்களும் வெளிப்படுத்தியுள்ளன.**

**இது ஜனநாயகம் –சிவில் சுதந்திரம் –நிறைவேற்று அதிகாரத்தைக்கைப்பற்றுவதிலிருந்துபொதுமக்களின் இறைமையை பாதுகாப்பதில் நீதித்துறையின் பங்களிப்பு ஆகியவற்றிற்கு விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தலாகும்.**

**உண்மையில் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலங்கள் இலங்கையின் குடிமக்களின் பரந்த அளவிலான சாதாரண நடவடிக்கைகளின் மீது அதிகப்படியான நிறைவேற்று அதிகாரத்தை நிறுவனமயமாக்கும் முயற்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.**

**ஒன்றுகூடல், பேச்சு, கருத்து மற்றும் சிந்தனை சுதந்திரத்தை பறித்து, நிறைவேற்று அதிகாரத்திற்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கும் இத்தகைய சட்டங்கள், அரசியலமைப்பின் கீழ் மக்களின் இறையாண்மையைஆக்கிரமிக்கின்றமையால்அவை உடன் மீளப்பெற வேண்டும் – என்றுசட்டத்தரணிகள் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

**மக்களின் கிளர்ச்சி, எதிர்ப்பு என்பவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பும் இந்த ஆட்சி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீண்டும் அதே வடிவத்தில் கொண்டு வர முயற்சிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், அதனை எதிர்ப்பதும், முறியடிப்பதும் மக்களின் கடமை.**

# கிழக்கு மாகாண ஆளுநர் பதவி விலக வேண்டும்

## வலியுறுத்துகிறார் அருட்தந்தை சக்திவேல்

தியாக தீபம் திலீபன் மக்கள் அஞ்சலி ஊர்தியும் அதனோடு பயணித்தவர்கள் தாக்கப்பட்டமைக்கு தார்மீக பொறுப்பை ஏற்று கிழக்கு மாகாண ஆளுநர் பதவி விலக வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமானஅருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தியாக தீபம் திலீபன் மக்கள் அஞ்சலி ஊர்தியும் அதனோடு பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் உட்பட ஏனையோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தாக்கப்பட்டமைக்கு தார்மீக பொறுப்பைஏற்றுகிழக்குமாகாண ஆளுநர் பதவி விலக வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களிடத்தும், ஒட்டு மொத்த தியாக தீபம் திலீபன் உணர்வாளர்களிடத்தும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு துறை ஜனாதிபதியிடமே உள்ளது. அவரின் பிரதிநிதியாக மாகாணத்தில் செயற்படுபவரே ஆளுநர் . அவர் தனது கடமையை செய்ய தவறி விட்டு அமைதியாக வீதியில் பயணித்த நினைவஞ்சலி குழுவினரை குற்றம் சாட்டுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை தியாக தீபம் திலீபனின்அஹிம்சைஉணர்வோடு கூறுகின்றோம்.

தியாக தீபம் திலீபனின் மக்கள் அஞ்சலி ஊர்தி பயணத்தை ஆரம்பித்து மூன்றாம் நாளே



கொடூர கொலைவெறி இனவாதிகளால்தாக்குதலுக்கு உள்ளானது.

தாக்கியவர்களின் கைகளில் சிங்கக்கொடிகாணப்பட்டது.அதுவே ஆளுநரின் அலுவலகத்தையும் உள்ளே அலங்கரிக்கின்றது. சிங்க சிந்தனையேதாக்குவதற்கு காரணம்.

ஊர்தி பயணத்தை ஆரம்பித்த நேரத்தில் இருந்து அரச புலனாய்வாளர்களும் பொலிஸாரும் ஊர்தியை அதனோடு பயணித்தவர்களை நேரடியாக ஒளி/ஒலி பதிவு செய்ததோடு புகைப்படங்களையும் எடுத்து உரிய தரப்பிற்கு தொடர்ச்சியாக அனுப்பிக்கொண்டேஇருந்ததோடு கள நிலைவரங்களையும் தெரியப்படுத்திக்கொண்டேஇருந்தனர்.

இவர்களுக்கு கள நிலைவரம் நன்றாக தெரிந்திருந்த நிலையிலேயே தாக்குதல் நடந்திருந்தது என்றால் அது திட்டமிட்ட இனவாதிகளின் செயல்பாடுகள் என்றே கூறவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் நேரடியாக அரசின் பாதுகாப்பை மறுத்து இருந்தாலும் அவருக்கான பாதுகாப்பை தனது மாகாணத்தில்கொடுக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் மாகாண ஆளுநருக்கு உள்ளது.

ஊர்தி பயணத்தை ஆரம்பித்த முதல் நாளே அக்கரைபற்றில் எதிர்ப்பு இருந்தது. இரண்டாம் நாள் வாழைச்சேனை பிரதேசத்திலும் எதிர்ப்பு இருந்தது. இதனை நன்றாக தெரிந்திருந்த பாதுகாப்பு தரப்பினர் தொடர்ந்து பயணத்தைஉரியபாதுகாப்பின்றி தொடர்ந்து செல்ல அனுமதி தந்தார்கள் எனில் அது தாக்குதல் நோக்கம் கொண்டதாகும். இவ்வாறான தாக்குதலுக்கு இடம் அளித்த பொலிஸ் அதிகாரிகள் குற்றவாளிகளே. மாகாண மட்டத்தில் அவருக்கு பொறுப்பாக இருக்கின்றவர்களும் குற்றவாளிகளே. ஆளுநரும் குற்றவாளியே.

சிங்கள பௌத்த இனவாத காடையர்களை பாதுகாக்க ஆளுநர் நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் ஊர்தியோடு பயணித்தவர்கள் மீதும் குற்றம் சுமத்துகின்றார். எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை எவருக்கும் உள்ளது. ஆனால் தாக்குதல் நடத்தவும், சேதங்கள் விளைவிக்கவும் எவருக்கும் உரிமை இல்லை. தாக்கி சேதங்களை விளைவித்தவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொறுப்பு வாய்ந்த ஆளுநர் கருத்து தெரிவிப்பதன் மூலம் அவர் யாருக்கு பொறுப்பு வகிக்கின்றார் என்பது தெளிவாக இருக்கிறது.

எனவே ஆளுநர் அவர்கள் பொறுப்புதவறியது முதற் குற்றம். பொறுப்பை தட்டிக் கழித்து பிழையை அடுத்தவர் மேல் சுமத்துவது அதனை விட பெரிய குற்றம். இன, மத ரீதியிலான கொலை குற்றவாளிகளே நாட்டை ஆளுகின்ற போது சாதாரண மக்கள் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்படுவது இயல்பே.

இதற்கு முகம் கொடுக்கவும், தமிழர்களின் அரசியலை வென்றெடுக்கவும் தமிழர் தேசமாக தியாக தீபம் திலீபனின் உயிர்தியாக நாளில் ஒன்று சேர்வோம். எம் மக்கள் சக்தியை வெளிப்படுத்துவோம். காண்பிப்போம் . அரசியல் வழி தடத்தை நாம் தீர்மானிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

# கண்மூடித்தனமாக தாக்கியதில் வவுனியாவில் மாணவன் காயம்

## ஆசிரியர் மீது குற்றச்சாட்டு

வவுனியா நகர பிரபல பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவர் மீது ஆசிரியர் தாக்கியதில் பாதிப்படைந்த மாணவன் வியாழக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா நகர பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கு, அப்பாடசாலையின் பகுதித் தலைவராகிய ஆசிரியர் ஒருவர் தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கும் மேலாக தும்புத்தடி மற்றும் சப்பாத்து கால்களால் தாக்கினார் எனப் பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், அந்த மாணவன் மீண்டும் மீண்டும் குறித்த ஆசிரியரிடம் ஏன் என்னை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு பதில் கூறாது அதற்கும் தன்னை தாக்கினார் எனவும் மாணவன் தெரிவித்துள்ளார்.

எனினும், மாணவன் பெற்றோருக்கு இது தொடர்பாக எதுவும் கூறாமல் இருந்துள்ளார். இதனால் அதிக மன அழுத்தத்துக்கு உள்ளான மாணவன் புதன்கிழமை ஒரு கடிதத்தை தனதுவீட்டில்எழுதிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தை கண்ட பெற்றோர் மாணவனை விசாரித்த போது, நடந்தவற்றை கூறி தனது அடிகாயங்களையும் உட்காயங்களையும் காட்டியுள்ளார். தொடர்ந்து மாணவனை வைத்தியசாலையில் சேர்த்த பெற்றோர் இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் மாணவன் மூலம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதுடன், மாணவனின் கடிதத்தைக் கொண்டு வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் மாணவனின் தந்தையால் முறைப்பாடும்செய்யப்பட்டுள்ளது.

மாணவனால் எழுதப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

அன்புள்ள அப்பா, அம்மா நான் சுயநினைவுடன் எழுதும் கடிதம். எனக்கு பாடசாலை செல்ல விருப்பமில்லாத நிலை ஏற்படுகிறது. காரணம் 11.09.2023 தொடக்கம் எனது கற்றல் நடவடிக்கை தொடர்பாக என்னை வகுப்புக்குள்அனுமதிக்கவில்லை. அதற்கு காரணம் கேட்ட போது, பகுதித் தலைவர் ஆசிரியர் என்னை கீழே விழுத்தி தும்புத்தடியால் அடித்து, சப்பாத்து காலால் மிதித்து என்னை மாணவன் என்றும் பார்க்காது சித்திரவதை செய்கிறார். அதற்கு பிறகு இடைவேளை நேரம் சிறுநீர் கழிக்க வெளியே சென்ற போது என்னை வெளியே செல்ல விடவில்லை.

சிறுநீர் கழிக்க செல்ல கேட்டதற்கு தும்புத் தடியால் அடித்து, சப்பாத்து கால்களால் வயிறு மற்றும் கழுத்து பகுதியில் உதைந்தார். 20.09.2023அன்றுஎன்னை தும்புத்தடியால் அடித்து என் கை விறைத்து நிற்கும்போது என்னை பாவம் என்றும் பார்க்காமல் பூங்கன்றுக்கு தண்ணீர் ஊற்ற விட்டார். எனக்கு உடல் எங்கும் வலியாக உள்ளது.

மூச்சு விட கஷ்டமாகவுள்ளது. பாடசாலைக்கு வருவதற்கு சைக்கிள் ஓட நெஞ்சு வலிக்கிறது. இதனால் எனக்கு பாடசாலை வரவே விருப்பமில்லாது இருக்கிறது. எனவே எனது உடம்பிற்கு ஏதும் ஏற்படுமாயின் அதற்கு முழுக் காரணம் எனது பகுதித் தலைவராகிய ஆசிரியர் ஆவார் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவளை, குறித்த ஆசிரியரால் ஏற்கனவே ஒரு மாணவன் மீது தும்புத்தடி கொண்டு தாக்கிய சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளதாக பாடசாலை பெற்றோர் வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

குறித்த பாடசாலையில் ஒரு சில மாதங்களுக்கு முன் பிறிதொரு ஆசிரியரால் வேறு ஒருமாணவனின்செவியில்தாக்கி அவரும் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றிருந்தார்என்பதுடன், பாடசாலையின் நற்பெயர் குறித்து பெற்றோர் குறித்த விடயத்தை பெரிது படுத்தாமல் விட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05-100)

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய தகவல் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக முகாமைத்துவ வாரம் ஒக்ரோபர் 11 – 13 வரை

தேசியதகவல்தொழில்நுட்ப மற்றும் வர்த்தக முகாமைத்துவ வாரத்தின் ஆரம்ப நிகழ்வு 2023 ஒக்ரோபர் 11,12 மற்றும் 13 ஆம் திகதிகளில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டை டிஜிற்றல் மயமாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தும் வகையில் மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, தகவல் தொழில்நுட்ப தொழில் முயற்சிகளை ஊக்குவித்தலுக்காக புதிய தொழில்நுட்பம் தொடர்பில் அறிவை பெற்றுக்கொடுத்தல், திறன் விருத்தி, தொழில் ஆலோசனைகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம், மேல் மாகாணத்தில் (சாதாரண தர மற்றும் உயர்தர) பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்பயிற்சி கல்லூரி மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் முனைவோருக்கான தெளிவூட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மூன்று தினங்களாக நடைபெறும் குறித்த வேலைத்திட்டத்தின் போது தொழிற்சாலைகள் மற்றும் தொழில் ஆலோசனை நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக செயற்பாடுகளுக்கு வரையறுக்கப்பட்ட தொழில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான களம் அமைத்துக்கொடுக்கப்படுவதோடு, தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக செயற்பாடுகள் குறித்த செயலமர்வொன்றும் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடகச் சந்திப்பு வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றதோடு, தொழில்நுட்ப அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஜனக சம்பத் கீகியனகே, தேசிய எதிர்காலத்துக்கான திறன் வலுவூட்டல் நிறுவனத்தின் தலைவர் மது ரத்நாயக்க, மென்பொருள் சேவை நிறுவனம் மற்றும் இலங்கை கூட்டு நிறுவனம் தலைவர் ஜெஹான் பேரின்பநாயகம் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக செயற்பாடுகள் முகாமைத்துவ தொழிற்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் தொடர்ச்சியாக முன்னோக்கிச் செல்வதோடு, 2022 ஆம் ஆண்டில் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்குகளை ஈட்டியுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதனை 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. 144,000 அதிகமானதொழிலாளர்களுக்கு தொழில் பெறுக்கொடுத்து இலங்கை பொருளாதாரத்தில் சிறப்பான வகிபாகத்தை கொண்டுள்ள தகவல் தொழில்நுட்ப மற்றும் வர்த்த முகாமைத்துவ பிரிவு இந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கும் குறிப்பிடத்தக்க அளவான பங்களிப்பை வழங்குகிறது.

உலகளாவிய ரீதியில் தற்போதும் டிஜிற்றல்மயமாக்கல், தானியக்க, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப பாவனைகள் உயர்வடைந்து வருகின்றன. அதனுடன் இணைந்து எதிர்பார்க்கப்படும்திறன்விருத்தியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல், இத்துறையின் தொழிற்படையை 200,000 ஆக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு 15 வீதப் பங்களிப்பை பெற்றுக்கொள்ளவும் இலங்கையை உலக பொருளாதார சுட்டியில் கேந்திர நிலையமாக நிலைநிறுத்தி வளமான தேசத்தைக் கட்டியெழுப்பவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய தொழில்நுட்ப அமைச்சர் கனக ஹேரத்தின் வழிகாட்டலின் கீழ் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு, இலங்கை ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபை, இலங்கை மென்பொருள் சேவை சங்கம் மற்றும் கூட்டு நிறுவனங்கள், இலங்கை கனிணிச் சங்கம், தகவல் தொழில்நுட்ப தொழிற்சாலை சங்கம், இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களால் இந்த வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)

# அங்கொட வெலி சுதா துப்பாக்கியுடன் கைது



முல்லேரியா பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில், அங்கொட வெலி சுதா எனப்படும் பிரியந்த சிறிநந்த எனப்படும் பாதாளக்குழு உறுப்பினர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட அங்கொட வெலி சுதாவிடமிருந்து இத்தாலியில் தயாரிக்கப்பட்ட தானியங்கிகைத்துப்பாக்கியும்கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய முல்லேரியா, அங்கொட பகுதியில் உள்ள அம்பத்தலயிலுள்ள வீடொன்றை சோதனையிட்ட போது குறித்து துப்பாக்கியுடன் அங்கொட வெலி சுதா கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி பூரூனி மொட் 92 மி.மி. வகையை சேர்ந்த இத்தாலியில் தயாரிக்கப்பட்டதாகவும் அதன் மகசின் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 50 வயதுடைய நபரையும் துப்பாக்கியையும் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸாரிடம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (05)

# புதிதாக உருவாக்கப்பட்ட மத்திய வங்கி நிர்வாக சபையினது முதலாவது கூட்டம்

அண்மையில் நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க மத்திய வங்கிச்சட்டத்துக்கு அமைவாக புதிதாக ஸ்தாபிக்கப்பட்டநிர்வாகசபையின்முதலாவது கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் நிர்வாக சபையின் தலைவருமான கலாநிதி நந்தலால்வீரசிங்கதலைமையில்நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிர்வாக சபையின் உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, நிஹால் பொன்சேகா, கலாநிதி ரவி ரத்நாயக்க மற்றும் அனுஷ்க விஜேசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளநாணயக்கொள்கைசபையின் உறுப்பினர்களாகவும் செயற்படுவர்.

நாணயக்கொள்கைசபையின்முதலாவது கூட்டம் வெகுவிரைவில் நடைபெறுமென இலங்கைமத்தியவங்கிஅறிவித்துள்ளது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# இயற்கை வளங்கள் தீவகத்தில் அழிப்பு

## விசமிகளின் செயல் எனக் கூறி அதிகாரிகள் தப்பிப்பு

யாழ்ப்பாணம் தீவகப் பகுதிகளில் உள்ள பனைமரம் உற்பட பயன் தரும் மரங்கள் தொடர்ச்சியாக எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டு வரும் நிலையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அசண்டயீனமாக செயற்படுகின்றனர் எனத் தீவக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் தீவகப் பகுதியான வேலணைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மண்கும்பான் அல்லைப்பிட்டி போன்ற பகுதிகளிலே இவ்வாறு பயன் தரும் மரங்கள் எரியூட்டப்பட்டு அழிக்கப்படுகின்றன.

குறித்த பகுதிகளில் காணப்படும் பிரதான வளமான பனை வளம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதோடு வீதிகளில் நாட்டப்பட்ட நிழல் தரும் மரங்களும் இவ்வாறு அழிக்கப்படுகின்றன.

அது மட்டும் அல்லாது வயல் நிலங்களில் காணப்படும் புற்கள் இரவு நேரங்களில் விசாமிகளால் தீயிடப்படுவதால் குறித்த பகுதி முழுவதும் தீப் பரம்பல் ஏற்படுகிறது.

மாலை நேரங்களில் இத்தகைய செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் நிலையில் பிரதேசத்தில் சேவையில் ஈடுபடும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தடுப்பதற்கு உரிய பொறிமுறையை ஏற்படுத்தவில்லை எனக் குற்றச்சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்த போதும் விசமிகள் எரியூட்டுகின்றனர் எனக் கூறி அதிகாரிகள் தப்பித்துக் கொள்ளும் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமல்லாது தீயணைப்பதற்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும் என்பதற்காக அந்த வீதியால் வருகை தரும் அரச அதிகாரிகள் தீ ஏற்பட்டால் கூட அசமந்தமாக செல்லும் நிலை தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. இதுவரை சுமார் நான்கு தடவைகளுக்கு மேல் எரியூட்டப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில் மக்களின் வரிப்பணம் மூலம் பெறப்பட்ட நிதியில் தீயணைப்புப் பிரிவுக்குக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீவகப் பகுதி குடிநீருக்காக மாற்று வழிகளில் நீரைப் பெறுகின்ற நிலையில் விவசாய காணிகளும் உவர் தன்மையாக மாறி வருகின்றன.

இவ்வாறான நிலையில் பனை வளம் மற்றும் பயன் தரும் மரங்கள வகை தொகை இன்றி அழிக்கப்படும். ஆனால் தீவகத்தின் எஞ்சிய வயல் பிரதேசங்களும் முழுமையாக உவர் நிலமாகும்.

ஆகவே தீவகப் பகுதிகளி டம் இயற்கை வளங்களை அழிப்போருக்கு எதிராகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கின்றனர். (05)







# சீனக் கடன் தொடர்பில் மௌனம் காப்பது ஏன்?

## யாழ்ப்பாணத்தில் மஹிந்த ஜெசிங்க கேள்வி

சீனாவிடம் இருந்து இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் அல்லது சீன அரசாங்கமோ ஏன் மௌனம் காக்கிறார்கள் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த தேசிங்க கேள்வி எழுப்பினார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கின்ற நிலையில் தற்பொழுது ஐ.எம்.எப். ஏற்கனவே கடன் வழங்கிஉள்ளநிலையில்தற்போது சீனக்கடன் சம்பந்தமாக அறிக்கை கேட்ட போது இலங்கை அரசாங்கம் வாய் திறக்கவில்லை.

சீனா அரசாங்கமோ இலங்கைக்கு வழங்கிய கடனுக்கான கால நீடிப்புத் தொடர்பில் எதுவித கருத்துக்களும் கூறப்படவில்லை.

எனவே, கடந்த காலத்தில் மத்திய வங்கி ஆளுநர் எமது நாடு வெளிநாட்டில் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தாது என வெளிப்படையாகக் கூறியமையால் பிரச்சினை வந்தது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கி அதற்குத் தவணைபோடும்போது அனைத்து நிபந்தனைகளுக்கும் இலங்கை உட்பட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

அதுமட்டுமல்ல, வெளிநாடுகளில் பெற்ற கடனுக்கு அந்த நாடுகள் விதிக்கின்ற நிபந்தனைகளுக்கும் நாடு செவிமடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கை சீனாவிடம் மட்டுமன்றி இந்தியாவிடமும் கடன்களை வாங்கியுள்ள நிலையில் இந்தியா விதிக்கும் நிபந்தனைக்கும் உட்பட வேண்டிய தேவை உள்ளது.

அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து ஒன்பது ரில்லியன் ரூபா கடன் வாங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் கணக்காய்வு திணைக்களம் கூறி இருக்கின்றது. வாங்கப்பட்ட கடனில் மூன்று ரில்லியன் ரூபா மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக எனில், மிகுதி 9 ரில்லியன் ரூபா கொள்ளை அடிக்கப்பட்டு ஊழல் செய்யப்பட்டு இருக்கின்றது.

ஆகவே, 75 வருடமாக ஆண்ட ஆட்சியாளர்கள் எமது நாட்டையும் மக்களையும் பின்னோக்கி நகர்த்தியுள்ள நிலையில் தற்போது வெளிநாட்டு கடன் தொடர்பில் சரியான தீர்மானம் ஒன்றை எடுக்க முடியாத நிலையில் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நுவரெலியா பொது வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

நுவரெலியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகள், சுகாதார வைத்திய சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் வெள்ளிக்கிழமை மதியமளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

குறித்த ஆர்ப்பாட்டம் நுவரெலியா பொதுவைத்தியசாலை நுழைவாசலில் நடைபெற்றது.

தரம் குறைவான மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகம் செய்வதையும், வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துகள் தட்டுபாடு, வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லுதல், வைத்தியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாமை உட்பட்ட வைத்தியசாலைகளில் நிலவும் பலகுறைப்பாடுகளை முன்வைத்து குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (05)

# குருவிட்டவில் கடத்தப்பட்டவர் தாக்கப்பட்டுப் படுகொலை

குருவிட்ட, கொக்கோவிட்ட பிரதேசத்தில் இரும்பு கம்பியால் தாக்கி நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குருவிட்ட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடொன்றில் வசித்து வந்த குறித்த நபர் கடத்தப்பட்டு, வேறொரு வீட்டில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

பரன்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான நபரே தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் குருவிட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# நிபா வைரஸ் இலங்கையில் பரவுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுங்கள்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்து

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தீவிரமாக பரவும் நிபா வைரஸ் இலங்கைக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசாங்கமும் சுகாதாரத் துறையினரும் முன்னெடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தினார்.

'நிபா' வைரஸ் மிகவும் வேகமாக இந்தியா, பங்களாதேஷ், சிங்கபூர், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பரவி வருகின்றது. இது பரவும் அபாயம் காணப்படுவதாக உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது. இந்த வைரஸால் மரண வீதம் 40 -70 வீதமாக உள்ளது.

கொவிட் தொற்றால் மரண வீதம் 2 -3 வீதமாகவே இருந்துள்ளது. இதனால் நிபாவின் அச்சுறுத்தல் அதிகமாகும். இதனால் இது குறித்து அரசாங்கம் அவதானத்தை செலுத்தி உடனடியாக நடவடிக்கைகளை



முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் உங்களின் பணிகளை முறையாகச் செய்யுமாறு சுகாதார துறையை கேட்டுக்கொள்கின்றேன். - என்றார். இதன்போது பதிலளித்த சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகையில் நான் ஊடகத்தில் இது தொடர்பில் செய்திகளை பார்த்தேன். இந்த விடயம் குறித்து மருத்துவ ஆய்வு நிறுவன அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி முன்னேற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# 2 பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் கைகலப்பு

காதல் தொடர்பின் அடிப்படையில் இரு பாடசாலை மாணவர்களை தலைக்கவசம் மற்றும் கைகளால் தாக்கியதாகக் கூறப்படும் நான்கு இளைஞர்களைக் கண்டுபிடிக்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குஉள்ளான பாணந்துறையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் இருவர் பாணந்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

குறித்த மாணவர்கள் இருவரும் வியாழக்கிழமை பாடசாலை முடிந்து தங்களது வீடுகளுக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது சந்தேக நபர்கள் தாக்கினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஈஸ்டர் குண்டு தாக்குதலால்தான் கோட்டா ஆட்சிக்கு வந்தார் என்பதை ஏற்கமாட்டேன்!

## அடித்துக் கூறுகிறார் டிலான்

ஈஸ்டர் தாக்குதலால்தான் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில் -

இன்று எமது நாட்டில் மீண்டும் இனங் களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நடக்க ஆரம்பித்துள்ளன.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குப் பதில் கூற வேண்டும். இன்று பௌத்தத்தை வைத்து அரசியல் செய்வது அதிகரித்துள்ளது.

எவ்வளவு தூரத்துக்கு என்றால், புத்த பெருமான் பிறந்ததே இலங்கையில் தானாம். புத்தப்பெருமான் இங்கா பிறந்தார்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மட்டும் பேசிக் கொண்டிருக்காமல், இனிமேல் இவ்வாறான தாக்குதல் ஒன்று இடம்பெறாமல் இருக்க அனைவரும் செயற்பட வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

## ஓ.எல். ....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்களிடையே விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஹோமாகம, பிடிபனவில் அமைந்துள்ள கல்வி வெளியீடுகள் திணைக்களத்தின் பிரதான களஞ்சியசாலையில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய மத்திய நிலையங்களுக்கு பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படவள்ளன.

மேலும், கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, இந்த ஆண்டு பாடசாலை பாடப்புத்தக அச்சிடும்பணியை, குறைந்த செலவில், உரிய நேரத்தில் செய்து முடிக்க முடிந்தது மகிழ்ச்சிகரமான ஒரு விடயமாகின்றது.

இந்த ஆண்டு 70சதவீதமான பாடசாலை சீருடைகளை சீன அரசாங்கம் வழங்கியிருந்தது. அடுத்த ஆண்டிற்கு தேவையான பாடசாலை சீருடைகளையும் வழங்க சீனா இணங்கியுள்ளது.

தற்போது 11 இலட்சம் பாடசாலைமாணவர்களுக்கு வழங்கப்படும்காலைஉணவு திட்டத்தை 22 இலட்சம் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் இதற்கு அனுசரணை வழங்கவுள்ளதாகவுள்ளதோடு அத்துடன், தற்போது 2024ஆம் ஆண்டுக்கு அவசியமான பாடப்புத்தகங்களில் 50 சதவீதமானவை அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார்துறையினருக்கு வழங்கப்படவுள்ள பாடப்புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கை இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் டிசம்பர் 15 ஆம் திகதியளவில் அனைத்து பாடப்புத்தகங்களையும் அச்சிடும் பணி நிறைவடையவுள்ளன.

இதேவேளை, அடுத்து வரும் நாட்களில் சீரான விநியோகம் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்படும் - என்றார்.

## ஊடகங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருக்குதற்பொழுதுமக்களின் அபிலாஷைகள் என்ன, அவர்களின் உணர்வுகள் என்ன, அவர்கள் எதனை விரும்புகிறார்கள், எதனை சிந்திக்கிறார்கள் என்பது பற்றிய எந்த ஓர் அடிப்படை விடயமும் தெரியாது.

அவரைப் பொறுத்த வரையில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நடத்தப்பட வேண்டியுள்ளது. அந்த தேர்தலில் தான் மீண்டும் வெல்ல வேண்டும் என்கின்ற நோக்கு மட்டுமே இருக்கிறது.

அதற்காக அடக்குமுறைகளைக்கையாளுகின்றார். எதேச்சதிகாரமாக நடந்து கொள்கின்றார். தனக்கு போட்டியா உள்ளவர்களை எவ்வாறு கவிழ்க்கலாம் என்றே சிந்திக்கின்றார்.

குள்ளநரித்தனமான செயற்பாடுகளை முன்னெடுத்து தனது ஆட்சியைத் தக்க வைக்கின்ற சித்து விளையாட்டுகளைத் தொடக்கியுள்ளார். ஆகவே இந்த அராஜக ஆட்சியை அகற்றி மக்கள் ஆணைமிக்க ஒரு ஆட்சி உருவாக்கவேண்டும். அது மக்களாட்சி கோட்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

இதனைத் தடுப்பதற்கு இப்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்குச் சமாந்தரமாக ஊடகங்களை முடக்குவதற்கு நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது - என்றார்.

## பச்சிளம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் நாவுல பொலிஸாரின் உதவியுடன் இந்த மோசடியைக் கண்டுபிடித்து முறியடித்தனர். நாவுலவில் உள்ள வைத்தியசாலைச் சிற்றூழியரின் வீட்டில் வெள்ளிக்கிழமை நடத்திய திடீர் சோதனையின்போது ஆண், பெண் என இரு குழந்தைகள் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரச சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த இரு குழந்தைகளும் தற்போது நன்றாகப் பராமரிக்கப்படுகின்றன. இரு குழந்தைகளும்காலி மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள குடும்பங்களுக்கு விற்கப்பட இருந்தன.

குழந்தைகளின் தாய்மார் தெல்தெனிய மற்றும் நிக்கவரட்டிய ஆகிய இடங்களில் தற்போது வாழ்கின்றனர் என்றும் அதிகாரிகள் கூறினர்.

## பங்களாதேஷின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கடனின் முதல் தொகையான 100 மில்லியன் டொலர்களை கந்த வருடம் செப்டம்பர் 2 திருப்பிச் செலுத்தியது. மேலும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒகஸ்ட் 17 திருப்பிச் செலுத்தியிந்த நிலையில், எஞ்சியிருந்த 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை முழு வட்டியுடன் தற்போது செலுத்தியுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த நிலையில் வெளிநாட்டுக்கடன்களை மீளச் செலுத்துவதில்லை என்று அறிவிப்பை விடுத்திருக்கின்றது.

இந்நிலையில் நாணயப் பரிமாற்று ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கடனை முதற்தடவையாக பங்களாதேஷுக்கு முழுமையாக செலுத்தியுள்ளது.

## உள்ளூராட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே வேட்பு மனுக்களை இரத்து செய்ய முடியும் என்றார்.

## இலங்கையர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டவர்கள் தந்தை, தாய் மற்றும் மகன் என்று மாவட்டப் பொலிஸ் தலைவர் டத்தோ அலாவுதீன் அப்துல் மஜித் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட மூவரும் அங்கு வாடகைக்குக் குடியிருந்தவர்கள் என்றும் தாம் அந்த வீட்டிற்குள் சென்றபோது மூவரது சடலங்களும் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

கைகள் கட்டப்பட்டு தலைகள் பொலித்தீன் பைகளால் மூடிக் கட்டப்பட்ட நிலையில் மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் கிள்ளான் நகரைச் சேர்ந்தவர்கள். கொலையுண்டவர்களுக்குஅவர்களை கடந்த 6 மாதங்களாகத் தெரியும். கொலைஇடம்பெற்ற சமயத்தில்இரண்டுநாட்களாக அவர்கள் அந்த வீட்டில் தங்கியிருந்துள்ளார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை நடந்த வீட்டில் சண்டை நடக்கும் சத்தம் கேட்டு அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தந்தனர். இரவு 11 மணியளவில் பொலிஸார் அங்கு சென்றபோது மூவரும் கொலை செய்யப்பட்டிருந்தனர். கொலையாளிகள் தப்பிச் சென்றிருந்தனர்.

'இரு சந்தேக நபர்களும் கொலைகளைத்திட்டமிட்டனர் என்றுகாவல்துறைநம்புகிறது, மேலும் இந்த கொலைக்கான நோக்கம் இன்னும் விசாரணையில் உள்ளது,' என்று அவர் கூறினார், கொலைக்கான தண்டனைச் சட்டத்தின் 302 வது பிரிவின் கீழ் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றார் டத்தோ அலாவுதீன்.

விசாரணைகளுக்காக வீட்டின்உரிமையாளர்களான தம்பதியர்கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# கட்டுவன் முத்துமாரி அம்மனுக்கு 33 வருடங்களின் பின்னர் பூசை



யாழ்ப்பாணம் கட்டுவன் காசியம்பாள் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ் தானம் கடந்த 1990ம் ஆண்டுக்கு பின்னர் 33 வருடங்களுக்கு பின்னர் ஆலயத்தை சென்று பார்வையிடுவதற்கும் ஆலய வழிபாட்டிற்கும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

கட்டுவன் காசியம்மாள் அம்மன் ஆலய தேவஸ்தானத்தினரால், கல்வி இராஜாங்க முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தநிலையில், இராணுவத்தினரின் அனுமதியுடன் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிட்டதோடு ஆலயத்தில் பூஜை வழிபாடுகளும் முன்னெடுக்கப்பட்டது.

## உள்ளூராட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தேர்தல் ஆணையம் ஏற்கனவே கணிசமான தொகையை முதலீடுசெய்துள்ளது. எனவே, வேட்புமனுக்கள் ரத்து செய்யப்படுவதால், நிதி இழப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல், தேர்தலுக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ஆதாரங்களும் வீணாகின்றன.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான தீர்மானம் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சர்கள் மட்ட ஆலோசனைக் குழுவில் செப்டம்பர் 20 ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தேர்தல்கள் பிற்போடப்பட்டதன் காரணமாக, ஏற்கனவே வேட்புமனுவைச் சமர்ப்பித்த தனிநபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இந்தக் குழு பரிசீலித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி முடக்க சுமார் 9.3 பில்லியன் ரூபாவாகும் என முன்னர் கணக்கிடப்பட்டிருந்தது. அந்த நிதி அரசிடம் இல்லை என்று தெரிவித்து தேர்தல் பிற்போடப்பட்டது.

## தற்போதைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களிடம் நேற்றுக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துஉறுப்பினர்களும் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவே போராடுகின்றனர். இனம், மதம் என்ற போர்வையில் பொதுக்களை குருதி சிந்த வைப்பதற்கே முனைகின்றார்கள்.

பொதுமக்கள் இந்தப் பயங்கரமான செயற் பாடுகளை முன்னெடுக்கும் பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொள்ளாதீர்கள். 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் இலங்கையை அதல பாதாளத்திற்குள் தள்ளி னார்கள்.

அவ்வாறானவர்களுக்கு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும், அதிகாரத்தில் அமருவதற்ககும் இடமளித்தால் பொது மக்களாகிய நீங்கள் எரிந்து சாம்பலாகி காற்றில் கரைந்துவிடுவீர்கள். நாடும் இருப்பிடம் தெரியாது காணமலாகிவிடும்.

தற்போது பௌத்த தேரர்களை, இந்துமத குருமார்களை, அருட் தந்தையர்களை, மௌலவிகளை அழைத்து அரசியல் வாதிகள் வணக்கம் செலுத்தி ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வது தம்கு வெள்ளையடிப்பதற்காகவே. இது நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகம்.


ஆகவே தொடர்ந்தும் அரசியல்வாதிகளிடத்தில் ஏமாறுவதை விடுத்து, சர்வமதத் தலைவர்களும், நாட்டு மக்களும் ஒருங்கிணைந்து ஒன்றுபடுவது தான் பொருத்தமானதாகும் - என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com




Tourism Bureau
Northern Province
proudly presents
WORLD TOURISM DAY - 2023
Northern Feast
OUTDOOR FESTIVAL
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
Sept -29
09.00am - 09.00pm
VENUE:JAFFNA CULTURAL CENTER
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

காலைக்கதிர்
Kalaikkathir

# மிகக்குறுகிய காலத்தில் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதில் இலங்கை வெற்றி

## வியட்நாம் மத்திய வங்கி ஆளுநர் பாராட்டு

இலங்கை 12 மாதங்கள் எனும் மிகக்குறுகிய காலத்தில் பணவீக்கத்தை 65 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைப்பதில் வெற்றியீட்டியிருப்பதாகவும், பொருளாதார ரீதியில் முன்னேற்றங்கள் அடையப்பட்டிருக்கின்றன எனவும் வியட்நாம் மத்திய வங்கி ஆளுநர் குயேன்திஹொங்தெரிவித்துள்ளார்.

வியட்நாமுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஏ.சாஜ் யு.மெண்டிஸ்மற்றும்வியட்நாம்அரசவங்கி என்று அறியப்படும் அந்நாட்டு மத்திய வங்கியின் ஆளுநர் குயேன் தி ஹொங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு சில தினங்களுக்கு முன்னர் வியட்நாம் அரச வங்கி கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது கடந்த 12 மாதகாலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில்அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து வியட்நாம் அரச வங்கி ஆளுநர் நேர்மறையானதும், ஊக்குவிக்கத்தக்கதுமான பிரதிபலிப்பை வெளிப்படுத்தினார்.

இங்கு இருதரப்பினரும் நுண்பாக மற்றும் பெரும்பாகப் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொள்கைகள் குறித்தும், கடந்த சில தசாப்தங்களாக வலுவான பொருளாதார வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ள வியட்நாமில் நடைமுறைப்படுத்தப்படும் நாணய மற் றும் நிதிக்கொள்கை தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடினர்.

வியட்நாம் அரச வங்கி ஆளுநர் குயேன் தி ஹொங், உலகளாவிய ரீதியில் செயற்திறன்மிக்கதும் திறமையானதுமான மத்திய வங்கி ஆளுநர்களாக மிகுந்த நன்மதிப்பைப்பெற்ற 'குளோபல் பைனான்ஸியல் மெகஸீனால்' தெரிவுசெய்யப்பட்ட 3 ஆளுநர்களில் ஒருவராவார். அவரது இந்த சாதனைக்கு இலங்கைத்தூதுவர் மெண்டிஸ் வாழ்த்துத்தெரிவித்தார். அதற்குப்பதிலளித்தஆளுநர்ஹொங், 'குளோபல் பைனான்ஸியல் மெகஸீனால்' உலகளாவிய ரீதியில் சிறந்த ஆளுநர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு தனது வாழ்த்தைப் பகிர்ந்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட ஆளுநர் ஹொங், 12 மாதங்கள் எனும் மிகக்குறுகிய காலத்துக்குள் பணவீக்கத்தை 65 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைப்பதில் இலங்கை வெற்றிகண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார். அது மாத்திரமன்றி வட்டிவீதங்கள் குறைக்கப்பட்டிருப்பதாகவும், வெளிநாட்டுக்கையிருப்பில்அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், இலங்கை ரூபாவின் பெறுமதி ஸ்திரநிலைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும்அவர் தெரிவித்தார். அவருக்குப் பதிலளித்த இலங்கைத்தூதுவர் மெண்டிஸ், இன்றளவிலே உலகளாவிய ரீதியில் மிகவேகமாக வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தைக்கொண்ட நாடுகளில் ஒன்றாக வியட்நாம் மாறியிருப்பதாகவும், அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் எந்தவொரு நாட்டினதும் பொருளாதார வளர்ச்சியில் மத்திய வங்கி மிகமுக்கியவகிபாகத்தைக்கொண்டிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி பணவீக்கம், வட்டிவீதம், வேலைவாய்ப்பின்மை போன்ற முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகளில் வியட்நாம் நேர்மறையான வீதத்தைப் பேணிவரும் அதேவேளை, பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் கொண்டிருப்பதாக தூதுவர் மென்டிஸ் பாராட்டினார். (05)

# பஸ்ஸில் பயணித்த 18 வயதுடைய மாணவிக்குப் பாலியல் தொந்தரவு

## பொலிஸ் பரிசோதகர் பணி இடைநிறுத்தம்

தனியார் பஸ் ஒன்றில் பயணித்த 18 வயதுடைய பாடசாலை மாணவியை பாலியல் தொந்தரவு செய்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட கித்துல்கல பொலிஸ் பரிசோதகர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட விசாரணையின் பின்னர் சீத்தாவகபுர பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் குறித்த பொலிஸ் பரிசோதகர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் பரிசோதகர் ருவன்வெல்ல நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் துன்புறுத்தல் குறித்து மாணவி பஸ் நடத்துநரிடம் தெரிவித்ததையடுத்து, நடத்துநர் மாணவியிடம் அவரது தந்தையின் கைத்தொலைபேசி இலக்கத்தைப்பெற்று இதுகுறித்து தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (05)

# இலங்கையில் போலியான செயற்கை முட்டைகள் புழக்கத்தில் உள்ளனவா?

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிக்கை

போலியான செயற்கை முட்டைகள் புழக்கத்தில் இருப்பதாக பரப்பப்படும் தகவல் குறித்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

போலி பிளாஸ்டிக் அரிசி இருப்பதாக பரப்பப்படும் பிரசாரம் போன்று இதுவும் பொய்யான செய்தி என்பதால் முட்டையை உட்கொள்வதில் மக்கள் அச்சப்பட வேண்டாம் என அதிகாரசபை தெரிவித்துள்ளது.

எனவே, இவ்வாறான பொய்யான செய்திகளுக்கு ஏமாற வேண்டாம் எனவும், இலங்கையில் போலியான செயற்கை முட்டைகளை விற்பனை செய்யப்படவில்லை என்றும் ஆனால் இதுபோன்ற தவறுகள் நடந்தால், 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடு செய்யுமாறும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிக்கிறது. (05)




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# மினுவாங்கொடையில் 8 பாடசாலைகளின் அபிவிருத்திக்கு சஹீதா நிறுவகம் உதவி





கம்பஹா, மினுவாங்கொடை கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நௌபர் பௌசிக்குசொந்தமானசஹீதாபவுண்டேன் முன்வந்துள்ளது.

இதன்படி, மினுவாங்கொடை கல்வி வலயத்தின் பிரிவில் உள்ள 8 பாட சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு பவுண்டேன் 100 லட்சம் ரூபாவை வழங்கியது. நகர அபிவிருத்தி மற் றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின்வேண்டுகோளுக்குஇணங்க இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு புதன்கிழமை மினு வாங்கொடை கல்வி வலய அலுவ லகத்தில் இடம்பெற்றது. மினுவாங்கொடை நில்பனாகொட மகா வித்தியாலயம், ஹொரம்பெல்ல சீலவிமல மகா வித்தியாலயம், மினுவாங்கொடை கொரச ரணசிங்க மகா வித்தியாலயம், நதகமுவ கனிஷ்ட வித்தியாலயம், ஓபாத ஸ்ரீகுணானந்த ஆரம்பப் பாடசாலை, உடுகம்பல றோமன் கத்தோலிக்க ஆரம் பப் பாடசாலை, உடுகம்பல ஆரம்பப் பாடசாலை மற்றும் மினுவான்கொடை அல் அமான் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இந்தத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் இப்பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. இதேவேளை, கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள 34 பாடசாலைகளை நவீன உலகிற்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை அமைச்சர் பிரசன்னரணதுங்கவின்ஆலோசனையின் பேரில் செயற்படுத்தியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளின் கட்டடங்கள் தற்போது பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்தக் கட்டடங்களை முழுமையாக சீர மைக்க பாடசாலைகளிடம் பணம் இல் லாததால் அடிக்கடி சிறிய சிறிய சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

இது தொடர்பில் கவனம் செலுத்திய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கம்பஹா மாவட்டத்தி லுள்ள அனைத்து பாடசாலைகளையும் உரிய முறையில் ஆய்வு செய்து அந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கான திட்டத்தைத்தயாரிக்குமாறுநகரஅபிவிருத்தி அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பட்டய பொறியியலாளர்கள் மற்றும் கட்டடக்கலை நிபுணர்கள் கம்பஹா மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் சென்று தரவுகளைப் பெற்று இந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரித்துள்ளனர். ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் இந்தத் திட்டம் புதுப் பிக்கப்படும். மேல்மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த அபிவிருத்தி த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேல்மாகாண ஆளுநர்விமானப்படையின் மார்ஷல் ரொான் குணதிலக்கவால் இந்த அபிவிருத்தித்திட்டமும்அங்கீகரிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌபர் பௌசி, மினுவாங்கொடை கல்விப் பணிப்பாளர் வஜிர ரணராஜ பெரேரா, மினுவாங்கொடை பிரிவுகல்விப்பணிப்பாளர்விஜிதசோமசிறிம ற்றும்அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(05)

# வட்டுக்கோட்டையில் திலீபனுக்கு அஞ்சலி







தியாக தீபத்தின் நினைவேந்தல் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபன் நினைவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஈகச் சுடரேற்றபட்டது.

நாடாளுமன்றமுன்னாள்உறுப்பினர்ஈஸ்வரபாதம் சரவணபவன்,முன்னாள்பிரதேசசபைஉறும்பினர்கள், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளீர் அணியினர் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# குற்றப் புலனாய்வு பிரிவினர் ஜெயசிறிலிடம் விசாரணை



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு போலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரியினுடைய எழுத்து மூல கடிதத்தின் பிரகாரம் காரைதீவு பிரதேச சபை முன் னாள் தவிசாளரும் இலங்கை தமிழரசுக்கட்சி காரைதீவுக்கிளை தலைவருமானஜெயசிறில்கிழக்கு மாகாணம் குற்றத்தடுப்பு உளவு பிரிவினரின் திருகோணமலை தலைமை காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை மூன்றரை மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

என் மீது கொழும்பு தலை மையகத்தில் இருந்து குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்பட் டிருப்பதாக புலனாய் உளவுத் துறையினர் தெரிவித்தார்கள். இதில் உண்மைக்கு புறம்பான குற்றங்கள் சொல்லப்பட்டி ருக்கின்றது. எனினும் அதற்கான பதிலையும் வழங்கினேன்.

இந்த நாட்டிலே ஜனநாயக ரீதியாக தமிழர்களுடைய உரிமைக்காக குரல் கொடுத்து செயல்படுகின்ற எங்களுடைய செயல்பாட்டை மழுங்கடிப்பதற் காகவும் மன உளைச்சலுக்கு ஆளாக்கி எங்களை ஓரங்கட் டுவதற்காகவும் பல வருட காலமாக விசாரணைகள், நீதிமன்ற வழக்குகள் என்று இழுத்தடிக்கிறார்கள்.

உண்மையில் எந்தவித பிழையும் செய்யாத நாங்கள் இவ்வாறான பெரிய குற்ற பிரிவுகளினால் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றோம்.

ஆனால் பல குற்றவாளிகள் பதவிகளோடு ஆட்சியில் அதிகாரத்தோடும் உலாவிக் கொண்டிருக்கின் றார்கள். அவர்களுக்கெல்லாம்பாதுகாப்பை கொடுத்துவிட்டு குற்றமில்லாத எங்களை குற்றவாளி போன்று துன்புறுத்துவதும் மன உளைச்சலுக்கு ஆளாக்குவதும் இவர்களின் செயல்பாடாக உள் ளது - என்றார்.

# நுவரெலியா பொது வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

உணவுச் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு அபாரதம்

தெல்லிப்பளையில்திடீர்சோதனை

தெல்லிப்பளையில் இரு வாரங்களாக கடைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் உணவுச் சட்டங்களை மீறிய 6 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவர்கள் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்தினர்.

யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் கடைகளில் திடீர் சோதனைகளைநடத்தினர். காலாவதித்

# 5 வருடங்களின் பின்னர் ஆக்கத்திறன் கண்காட்சி

## தர்மபுரம் மத்திய கல்லூரியில்

கிளிநொச்சி மாவட்டம், தர்மபுரத்திலுள்ள மத்திய கல்லூரி மாண வர்களின்ஆக்கத்திறன் கண்காட்சி நேற்று பாடசாலைவளாகத்தில் இடம்பெற்றது. 5 வருடங்களின்பின்னர் பாடசாலையில் மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி இடம்பெறுகின்றது.



இக்கண்காட்சியினை அயல் பாடசாலை மணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் பார்வையிட்டனர். மாணவர்களின் அறிவுத்திறனை வளர்க்கும் நோக்கில் மாணவர்களின் தமது கைவண்ணத்தில் உருவாக் கப்பட்ட பல்வேறு வகையான ஆக்கப் பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சி பல மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## கல்வி அமைச்சின் தடையை அடுத்து

# வீதியோரம் கூடாரம் அமைத்து யாழ். இந்துவில் குருதிக் கொடை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நேற்று ஏற்பாடு செய்திருந்த குருதிக் கொடை நிகழ்விற்கு கல்வி அமைச்சு திடீர் தடை விதித்ததை அடுத்து, கல்லூரி முன்பாக வீதியோரம் தற்காலிகக் கூடாரம் அமைத்து அதில குருதிக்கொடை நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்கல்லூரியின் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் பலர் பங்கேற்று குருதிக் கொடை வழங்கினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடம் தோறும் செப்டம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் குருதிக் கொடை நிகழ்வு நடத்தப்படுவது வழமை. அந்த வகையில் நேற்றும் குருதிக் கொடை இடம்பெற்றது. நேற்றைய தினம் கல்வி அமைச்சினால் கல்லூரி வளாகத்துக்குள் குருதிக்கொடைநிகழ்வுஉள்ளிட்ட நிகழ்வுகள் நடத்துவதற்கு திடீர் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்ட விசேட கூடாரம் அமைத்து குருதிக்கொடை நடைபெற்றது










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2023இல் வெளியிடப்பெற்றது.